செ.வெ.எண் : 110 நாள் : 31.07.2021

**தூத்துக்குடி மாநகராட்சி தற்காலிக பேருந்து நிலையத்தில் புதிய சாதாரண கட்டண நகர வழித்தட பேருந்துகளை மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்து நகர பேருந்தில் பயணம் செய்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமை துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள் முன்னிலை வகித்தார்.**

---

தூத்துக்குடி மாநகராட்சி தற்காலிக பேருந்து நிலையத்தில் புதிய சாதாரண கட்டண நகர வழித்தட பேருந்துகள் துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.07.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு புதிய வழித்தட நகர பேருந்தினை துவக்கி வைத்து நகர பேருந்தில் மில்லர்புரம் வரை பயணம் செய்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமை துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள், மாநகராட்சி ஆணையர் திருமதி.சாருஸ்ரீ, இ.ஆ.ப., அவர்கள், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சண்முகையா அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி - தாளமுத்துநகர் (சிலுவைபட்டி) (வழி: 4வது கேட், அரசு மருத்துவமனை, பழைய பேருந்து நிலையம், தந்தி ஆபீஸ், திரேஸ்புரம், முருகன் தியேட்டர்) என ஒரு மார்க்கமாகவும்,

தாளமுத்துநகர் - மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் (வழி: முருகன் தியேட்டர், திரேஸ்புரம், மட்டக்கடை, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், தாலுகா ஆபிஸ், அரசு மருத்துவமனை, 3வது மைல்) என ஒரு மார்க்கமாகவும்,

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் - முள்ளக்காடு (வழி: மில்லர்புரம், அரசு மருத்துவமனை, பழைய பேருந்து நிலையம், உதவி ஆட்சியர் அலுவலகம், பீச் ரோடு, கேம்ப் 1, துறைமுக குடியிருப்பு, கேம்ப் 2, முத்தையாபுரம் பல்க், ஸ்பிக்நகர்) என ஒரு மார்க்கமாகவும் என 3 புதிய சாதாரண கட்டண நகர வழி தட பேருந்துகளை மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மனுக்களுக்கு தனி துறையை அமைத்து விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுத்துள்ளார்கள். விரைந்து

நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தூத்துக்குடி நகர பகுதியில் இயங்கி வந்த பல்வேறு பேருந்துகள் கடந்த 10 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டு இருந்தது. தற்போது பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் புதிய வழித்தட நகர பேருந்துகளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகளில் பெண்கள் பயணம் செய்ய இலவசம். இப்பேருந்துகளை பெண்கள் அதிக அளவில் பயன்படுத்துவார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து தூத்துக்குடி மில்லர்புரம் டி.எம்.பி. காலணி பகுதியில் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை பகுதியில் மாநகராட்சியின் மூலம் 5000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் மரக்கன்று நடவு செய்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருநெல்வேலி மண்டல மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஸ்வரன், பொது மேலாளர் திரு.சரவணன், துணை பொது மேலாளர் திரு.சசிகுமார், தூத்துக்குடி கிளை மேலாளர் திரு.பாஸ்கரன், மாநகராட்சி தலைமை பொறியாளர் திரு.சேர்மக்கனி, முக்கிய பிரமுகர்கள் திரு.ஆனந்தசேகரன், திரு.ஜெகன்பெரியசாமி, மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.வித்யா, உதவி செயற்பொறியாளர் திரு.சரவணன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.